<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>MCOP.No.67/2025</u>

**RW : 1**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A., M.L., Ph.D., தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. M.R. ரமேஷ் | த/ பெ. | : | திரு. ராமானுஜம் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| தொழில் | : | கிளை மேலாளர் | வயது | : | 57 |

<u>26.03.2026</u>

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் கிளை மேலாளராக பணிபுரிகிறேன். நான் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி 1 ஆக சாட்சியமளித்துள்ளேன். எனது தரப்பில் எழுத்துமூல நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மையானவை. அவை என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) 15.11.2024 ஆம் தேதிய **காப்பீட்டு சான்று நகல் எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 18.03.2025 ஆம் தேதிய விபத்தில் இறந்த கலைச்செல்வனின் **Viscera Report நகல் எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 27.12.2024 ஆம் தேதிய **குற்ற இறுதி அறிக்கை கணினி நகல் எ.ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**என் சாட்சியத்தை ஏற்று 2 ம் எதிர்மனுதாரருக்கு எதிரான வழக்கை ஏற்று தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.**

<u>மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

என்னால் பார்வையிடப்பட்ட விபத்து சம்பந்தப்பட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை, இறுதி அறிக்கை ஆகியவற்றை வாகன பதிவெண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வாகனத்திற்குரிய காப்பீடு நகலை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

அந்த காப்பீட்டில் Owner driver என குறிப்பிட்டு பிரிமீயம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். உரிமையாளரே ஓட்டுநராக இருக்கும்போது தான் அது பொருந்தும். மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட மருந்து மாத்திரைகளை உட்கொள்ளும்போது அதிலும் ஆல்கஹால் இருக்கும் என்றால் அது எனக்கு தெரியாது. என்ன பரிசோதனையில் ஒருவர் மது அருந்தி இருக்கிறார் என்பது கண்டறியப்படுகிறது என்றால் அதுப்பற்றிய விவரம் எனக்கு தெரியாது. எத்தனை சதவீதம் ஆல்கஹால் இருந்தால் மதுவிலக்கு சட்டப்படி குற்றம் என்பது எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

மருந்து மாத்திரைகள் உட்கொள்வதால் ஆல்கஹால் இருந்ததா அல்லது மது உட்கொண்டதால் ஆல்கஹால் இருந்ததா என்று அது பற்றி எனக்கு தெரியாது. அவர் மருந்து மாத்திரை உட்கொண்டதால், காண்பிக்கப்பட்ட ஆல்கஹால் அளவை எங்களுக்கு சாதகமாக அவர் மது அருந்தி வாகன ஓட்டினார் என்று பொய்யாக எங்களுக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இறந்த கலைச்செல்வனுக்கு உரிய ஓட்டுநர் உரிமமும், வாகனத்திற்கு காப்பீடும் விபத்து காலத்தில் இருந்ததால் எங்களது நிறுவனம் தான் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.03.26 17:18:10 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்